சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.26.11.2024
OS.No.725/2018
PW 1 : பிரபாவதி (வயது 40 ) க/பெ. அமிர்தராஜ்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து சமயபுரத்தில் உள்ளது. 1 ஆம் வாதி செல்வகுமாரி எனது உறவு முறை இல்லை. 1 ஆம் வாதியும் நானும் சேர்ந்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 85/11. தாவா அ அட்டவணை சொத்து 1 ஆம் வாதி செல்வகுமாரிக்கு பாத்தியமானது. 1 ஆம் வாதியின் தகப்பனார் திரவியம் பிள்ளை தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். எந்த தேதியில் எழுதி கொடுத்தார் என்று ஞாபகம் இல்லை. அந்த தான பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை. சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அசல் ஆவணம் என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. அந்த அசலை தேடி பார்த்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா அ அட்டவணை சொத்து திரவியம் பிள்ளைக்கு பாத்தியமானது இல்லை என்றும் அவர் அதனை 1 ஆம் வாதிக்கு தானமாக எழுதி கொடுக்கவில்லை என்றும், அதனால் தான்அதன் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா அ அட்டவணை சொத்தை திரவியம் பிள்ளை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. திரவியம் பிள்ளைக்கு சொத்து பாத்தியமானதற்கான முந்தைய உரிமை ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான காரணம் என்ன என்றால் தெரியவில்லை. தாவா சொத்து திரவியம் பிள்ளைக்கு பாத்தியமானது என்று கற்பனையாக கூறுகிறோம் என்பதால் தான் அதன் அசல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தின்

அளவுகள் என்ன என்றால் 50 க்கு 30 அடி ஆகும். தாவா அ அட்டவணை சொத்தின் அளவுகள் என்ன என்று தெரியவில்லை. தாவா பி அட்டவணை சொத்தை அமுதா என்பவரிடமிருந்து 2010 ல் கிரயமாக நான் வாங்கியுள்ளேன். அதற்கான அசல் கிரய பத்திரம் எனது கணவரிடம் உள்ளது. அவர் வெளிநாட்டில் உள்ளார். அவரிடம் கேட்டு அதனை என்னால் தாக்கல் செய்ய முடியும். தாவா பி அட்டவணை சொத்தை நான் வெங்கடேசன் மற்றும் பலரிடமிருந்து கிரயமாக வாங்கவில்லை என்றும், அதற்கான அசல் பத்திரத்தை தாக்கல் செய்தால் அந்த ஆவணம் மோசடியாக ஏற்பட்ட விவரம் தெரியவரும் என்பதால், அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் தாவா பி அட்டவணை சொத்திற்கான அசல் கிரய பத்திரத்தை பற்றி என்ன கூறியுள்ளேன் என்றால், அது எனது கணவரிடம் உள்ளது என்றும், அவர் வெளிநாட்டில் இருப்பதால், அவரை கேட்டு தான் சொல்ல முடியும் என்று சொல்லியுள்ளேன். முன்பாத்தியஸ்தர்களின் பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு சொத்திற்கான வருவாய் ஆவணங்களை பார்த்தேனா என்றால் என் கணவர் தான் அதனை பார்த்துக்கொண்டார். தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டுதான் கிரயம் வாங்கினோம். தாவா சொத்திற்கான அடங்கல் யார் பெயரில் இருந்தது என்றால் நிறைய நபர்கள் பெயர்கள் இருந்ததால் அது பற்றி தெரியவில்லை. எனது கணவர் தான் கிரயம் வாங்கும்போது, அனைத்து ஆவணங்களையும் பார்த்தார் என்பதால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. ச.எண்.85/11 க்கான பட்டாதாரர் யார் என்றால் பார்வதி, மருதாயி. ராகவேந்திரா ஹைறவே பார்க் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 85, 86, 90, 91, 92 ஆகிய சர்வே எண்களில் உள்ளது. அந்த சர்வே எண்கள் எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்று ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். மருதாயி, பார்வதி ஆகியோர்களின் பெயர்களில் உள்ள பத்திரங்கள் உள்ளதா என்றால் எனது கணவர் தான் அனைத்து சட்ட

நடைமுறைகளையும் பார்த்தார் என்பதால் அவருக்கு தான் அது பற்றி தெரியும். எனது கணவர் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். எனது கணவர் வர, போக இருக்கிறார். எப்போது வருவார் என்று தெரியவில்லை. எனது கணவருக்கு தான் அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், நான் சமாளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குு.வி தொடர்ச்சி-** வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/signed/
பிரபாவதி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.11.26 18:36:22 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி